விலை 0-1-3 அணா UDUMALAI BEERANGI டெலிபோன் 2597.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R. இரங்கநாதன்

வாரப்பதிப்பு

வெடி. 1] சென்னை, சனிக்கிழமை (9-4-1949) [குண்டு 25

வாழ்க அழகிரி புகழ்

"இரா. க. முருகன்"

இராம இராவண போர்க்களத்தில் கும்பகர்ணன் போர் தலைக் கொண்டு இராமனுடன் எதிர்த்தும் போராடுகிறான். விபீஷணன் எவ்வளவோ தடுத்தும் எவனுடைய உப்பைத்தின்று தன்உடலை வளர்த்தானோ அவனையே காட்டிக் கொடுக்க மனமில்லாமல் இராமனுடன் கடும்போர் நிகழ்த்துகிறான்: ஆனால் களத்தில் கும்பகர்ணன் தன் தலையைக் கடலில் சேர்த்துவிடும்படி இராமனை வேண்டிக்கொள்கிறான். இராமன் தன் கோதண்டத்தை வளைத்து கும்பகர்ணன் மேல் அம்பு எய்ய, அது அவன் தலையைச் சமுத்திரத்தில் கொண்டு சேர்த்து பின் ஏழு சமுத்திரங்களில் நீராடி அப்புறுத்தூணியை வந்தடைகிறது. இது கம்பர் வர்ணிக்கும் இராமனின் வீரம்.

அதே நேரத்தில் போர்க்களத்தில் ஏற்கும் வடுக்களே:வயிரப்பதக்கங்களாக புன் முறுவல் பூத்த முகத்துடன் பெறும், அஞ்சாநெஞ்சம் படைத்த போருக்கு விடுத்து அவன் போரில் புறமுதுகிடின் தன் தனத்தை வெட்டி வீழ்த்துவதாக சூளுரைக்கும் தாயார் மரபில் உதித்த போர்வீரன் ஒருவன், வேட்டையாடும் பொழுது காட்டகத்தேயானையின்மேல் அம்பு எய்ய, அதுயானையின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு எய்த வேகத்தில் அதன் பின் சற்று தூரத்தில் புல் மேய்ந்து கொண்டிருக்கும் புள்ளிமானை ஊடுருவி அதனருகில்வானுற ஓங்கி வளம் பெற்றிருக்கும் ஒரு மரத்தில் போய் தைத்து நிற்கிறது. என்று வீரத்தை ஒரு சங்க காலப் புலவன் வர்ணிக்கிறான்.

இவ்விரண்டு எடுத்துக் காட்டுகளும் (மறைந்த மாவீரர் அழகிரிசாமி அவர்கள் கம்பரையும், ஆரிய திராவிடப் போரையும் பற்றி வீர உரை ஆற்றும்போது எடுத்துக் காட்டும் மேற்கோள்கள். இவைகளில் ஆரிய அடிவருடி கம்பர்கட்டும் கற்பனைக்கதையில் கூறும் ஆண்மையும், உண்மையில் உள்ளதை உள்ளபடி கூறும் மற்றொரு புலவன் காட்டும் வீரமும் நமக்கு விளங்கினும் அதனை அழகிரிசாமியவர்கள் ஆற்றும் பேச்சில் கேட்கப்பெறின ஒருதனிச்சிறப்பைக் காணமுடியும்.

மறைந்த மாண்புடையார் சொற்பெருக்கில் தனிப் பெருமை பெற்றவர்- அவர் தலைவர் (பெரியாருடன் தோளொரு தோளாம் மக்கள் நலனில் நாட்டங்கொண்டு தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் தொண்டு செய்துவந்தார். அவரை இன்றைய இன்பத் திராவிடம் இழந்து தவிக்கிறது.

அந்தக் காலத்தில் அழகிரிசாமி மேடையில் பேசுகிறார் என்றால் வைதீகர் வயிறு எரியும். நன்மை தீமை எதுவென்று பகுத்தறிவுக் கொண்டு அறியும் ஆற்றலிலார் நாஸ்திகப்பிரசாரம் என்று தூற்றுவர். காலிகள் கையில் கல்லுடன் அவரைக் காணவருவர். அவர் மக்களின் முன்னிலையில் பகுத்தறிவூட்ட முற்பட்டகாலத்தில் இன்று நாடு அறிந்துள்ள அவ்வளவு அறிவு அன்றைய மக்கள் பெற்றிருந்தார்கள் என்று கூறமுடியாது. அவர் சென்ற இடமெல்லாம் செத்த பாம்புகளும், கற்களும், மண்ணாங்கட்டிகளும், ஏன் சாணி உருண்டைகளும் வரவேற்பளிக்கும். அதற்கிடையேபேசுவதென்றால்அப்பப்பா! சொல்லமுடியாத் துயரம். அதனிடையே சற்றும் சளையாது மணிக்கணக்கில் மக்கள் முன்னிலையில் பேசுவார் நம் தளபதி அழகிரிசாமியவர்கள். அவர் திராவிடத்தின் விளக்கொளியாய் விளங்கினார். விளக்கு அணைந்துவிட்டது

சென்ற இந்திப்போராட்டத்தில் வெற்றி காண உழைத்த வீராங்கனைகள் பலரில் தலையாயவர்களில் ஒருவர் நம் தளபதி.

அவர் உண்டு கொழுத்து உல்லாசமாய் வாழும் பணத்தில்பிறந்தவருமல்லர். கடைசிவரை வறுமையில் வாடி வதங்கியே மாண்டார். வறுமையால் வாட்ட மடைந்தாலும் பொதுப்பணியில் வாட்டமடைந்ததே கிடையாது.

திராவிடப் பூஞ்சோலையில் பூத்த புதுமலராய் மணத்துடன் விளங்கிய அவர் காசநோயால் பீடிக்கப்பட்டு காலம் என்னும் கையால் பறிக்கப்பட்டு விட்டார், ஆனால் அவர் தோற்றுவித்த அநேக பூக்கள் இன்று சோலையை அலங்கரிக்கின்றன.

தன் மான இயக்கத் தளபதி தன் தனயரை யெல்லாம் தவிக்கவிட்டுப் பிரிந்து சென்றார். ஆனால் அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றும் ஆயிரமாயிரம் இளங்காளைகள் இன்று விளங்குகின்றார்கள்.

தியாகத்தின் சிகரம் சரிந்துவிட்டது அவர் தோன்றிய காலத்திலிருந்தே தொண்டாற்றிய சுய மரியாதை இயக்கத்தின் வளர்ச்சி கண்டு மகிழ்வடைந்தார், இயக்கத்தில் அவர் கொண்ட நம்பிக்கையானது "இந்த இயக்கத்தைச் சிலரே துவக்கினர். ஆனால் இப்பொழுது இவ்வியக்கத்தில் பல பெரியோர்களும் அளவற்ற மக்களும் சேர்ந்திருக்கின்றனர். இவ்வியக்கத்தை இனி அசைத்தல் இயலாது" என்ற அளவுக்குத் துணிவளித்தது.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்கவும்)

டெல்லிக்குக் காவடி

(திரு. குமாரசாமி ராஜா அவர்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவராக்கப்பட்டதும் அவரும் மற்றையோருமாக க்ஷேமமுடன் டெல்லி யாத்திரையை முடித்துவிட்ட பின்பே புது சபையைக் கூட்டுவிக்கலாயினர்.)

இந்தியா பேசுகிறது

சம்மட்டியார்

ஆம், இந்தியா பேசுகிறது. உள்ளம் விட்டு பேசுகிறது. மூடிமூடி மறைத்து வைக்கப்பட்டதையெல்லாம் பட்டவர்த்தனமாக அம்பலத்திற்குக்கொண்டு வந்து பேசுகிறது. பேசாமல் என்ன செய்யும்? என்றாவது ஒருநாள் அடக்கிவைத்திருப்பது பீறிட்டுக்கொண்டுவந்துதானே தீரவேண்டும்.

என்னமோ பேசுகிறது, பேசிவிட்டுப்போகட்டும் என்றுகேட்டும் கேளாததுபோல் இருந்துவிட்டதா உலகம்? அதுதான் இல்லை. கேட்ட உலகம் சிரித்தது. சிரிப்பென்றால் வெறும் சந்தோஷத்தால் அல்ல. நகைத்தது! கேலிச்சிரிப்பு சிரித்தது. தூ இதுதானா உள்ள நிலைமை. இவ்வளவு மோசமான தன்மையை வைத்துக்கொண்டு ஏன் வீண்பகட்டு வெட்டிஜம்பம் அனாவசிய ஆடம்பரம் பண்ணிக்கொண்டு திரிகிறாய், பீதாம்பரம் போர்த்திக்கொண்டிருக்கிறாயே, பெரிய கனவான் என்றல்லவா எண்ணி!யிருந்தேன். கைகுலுக்கவந்தேன். கையைப் பார்த்தால் அழுகிக் கரைந்து கொண்டல்லவாயிருக்கிறது. குஷ்டரோகிக்கு பீதாம்பரம்ஒருகேடா? மனதைக் கொள்ளைகொண்ட இளமை பூத்த மாயசுந்தரி என்று அருகில் வந்தால் பவுடர் பூசிய 'மேக்கப்' கிழவியாக அல்லவா இருக்கிறாய். விஷயம் இப்பொழுதல்லவா புரிகிறத. என்று சிரித்து சிரிப்பாய்ச் சிரிக்கடித்தது. உலகம்!

அதைக்கண்டு இங்குள்ள பத்திரிகைகள் அழுகின்றன. உள்ளதைத்தானே இந்தியா உலகத்திடம் சொன்னது. அதில் தவறென்ன? என்று அந்த பத்திரிகைகள் பேசாமல் இருந்து விடவில்லை. ஐயோ மானம் போகிறதே ஏ இந்தியாவே உன்னை யார் அடுத்தவீட்டில்போய் உன் குறையைப்பற்றி முறையிடச் சொன்னது. உலகம் சிரிப்பதைப் பார்த்தால் எங்களுக்கு நாக்கைப் பிடுங்கிக்கொள்ளலாம்போல் ஆத்திரமும் அழுகையும் பொங்குகிறது. நம் வீட்டு விஷயம் வெளிக்குத் தெரியாமல் கண்ணியமாக காலந்தள்ளி வரும்போது நீ போய் இந்தமாதிரி "எங்க வூட்டுக் காரர் டாக்ஸியிலேயே பட்டு அங்கவஸ்திரம் சரிகை வேட்டியோடே போய் வராறு எங்க வீடு பிரமாதம், ஒன்றும் இங்கே குறைவில்லையென்று தப்புக் கணக்கு போட்டோதிங்க. அவர் வாங்கற சம்பளத்தை அவர் சொந்தச் செலவுக்கே சரிக்கட்டிகிட்டு ஆடம்பரமாத் திரியராரு. நாங்க வெறுங்கஞ்சியும் ஊறுகாயும் உட்கொண்டு காலந் தாட்றோம்" என்று சொல்லப் போக போரவன் வாரவன் எல்லாம் இனிமேஎன்னை ஒரு காசுக்கு மதிப்பானா? என்று கண்ணீர் விடுகின்றன, இந்தியாவின் சார்பாக சில ஏடுகள்.

அமெரிக்காவிலே இந்தியாவின் நிலைமையைப்பற்றி விளக்கும் காட்சிகள் கொண்ட 'இந்தியா பேசுகிறது' என்றொரு படம் பிடிக்கப்பட்டு 'நியூயார்க்' நகரத்திலே காட்டப்பட விருந்தது. அதை ஆட்சேபித்து அமெரிக்காவிலுள்ள ஹிந்துஸ்தான் மாணவ சங்கம் ஒரு அமைதியான ஆர்பாட்டம் நடத்திற்று. அதன் விளைவாகப் படம் காட்டப்படாது, வாபஸ் வாங்கப் பட்டது.

படத்தின் பெயர் "இந்தியா பேசுகிறது"என்பதாகும். எப்படிப்பட்ட இந்தியா என்று தெரிய வேண்டுமல்லவா? அப்பொழுது தானே அது பேசப்போகும் விஷயம் தெளிவாகும். பத்தாயிரம் தீச் செயல் (பாவங்)களுக்குத் தாயான இந்தியா-அப்படிச்சொன்னால் போதுமா இன்னும்கொஞ்சம் விளக்கம்வேண்டும் என்றுகேட்பார்களென்றுதான் பெண்மக்கள் ஆடுமாடுகளைப்போன்று நடத்தப்படும் இந்தியா—அடடே பெண்மக்களே ஆடுமாடுகளைப் போன்று மிருகங்களைப்போன்று நடத்தப்பட்டால் அப்பொழுது மிருகங்கள் இன்னும் கேவலமாகவல்லவா நடத்தப்படவேண்டும் என்ற சந்தேகம்ஏற்படும் என்றே—அதையும் தெளிவாகச் சொல்லிவிட்டன. அந்தப்படத்திற்கென விளம்பரம் தாங்கி வந்த சுவரொட்டிகள். பெண்கள் கால்நடைகளைப்போன்றும், ஆனால் கால்நடைகள் மால் மருகன்போன்று தெய்வங்களாக்கப்பட்டு தொழப்படும் நிலைமையுள்ள இந்தியா பேசுகிறது" என்றால் உலகம் சிரிக்காமலா இருக்கும்?

பெண்கள் மிருகங்களைப்போல் நடத்தப்படுகிறார்கள்' என்று 'இந்தியா சொன்னது'. அதைக்கண்டு அங்குள்ள இந்திய மாணவர்களுக்கும் இங்குள்ள பத்திரிகை ஆசிரியர்களுக்கும் ஏன் கண் சிவக்கவேண்டும். இங்கென்ன! பெண்களுக்கு உரிமை வழங்கப் பட்டிருக்கிறது என்பது அவர்கள் எண்ணமா? சம உரிமை யில்லாவிடினும் பெண்கள் பெண்களாகவாவது நடத்தப்படுகின்றார்களா? 'இந்தியா பேசியதை பார்த்து ஆத்திரமடைந்தவர்கள் தலைநிமிர்ந்து பதில் கூற முடியுமா?

ஆறறிவு படைத்த பெண்ணினம் ஐயறிவு கொண்ட விலங்கினத்தைப் போன்று நடத்தப்படவில்லை. மிருகங்களைவிடக் கேவலமாக நடத்தப் படுகின்றனர் என்று நம்மால் நிரூபிக்கமுடியும். 'போன்று' என்று சொல்லியபோதே சீற்றங்கொண்டு சீறிப் பாய்ந்தவர்கள் 'மிருகங்களைவிடக் கேவலமாக' என்று போட்டிருந்தால் என்ன செய்வார்களோ என்றஞ்சித்தான் 'போன்று' என்ற பதத்தைப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

'பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு' என்றும்; இன்னும் பெண்ணைப் 'பேயென்றும் நாயென்றும்' தூற்றிய கொடுமை இந்த பாரத தேசத்தைத் தவிர வேறு பாரெங்கும் பார்க்கக் கிடைக்காது. பாரத தேசத்திலும் இந்து மதத்திற்கே தனிஉரிமைதான் பெண் கொடுமை ஏனெனில்உயர்ந்த அரிய ஆத்மார்த்திகப் பொக்கிஷங்களைத் தன்னகத்தே உடையதல்லவா? 'பாரீர் எங்கள் விவேகானந்தாவை இங்குமட்டுமல்ல, எமது பெருமை பொருந்திய மதத்தை உலகம் பூராவும் பரப்பிப் புகழடையச் செய்த பெரியமகான் சிகாகோ நகரில் அவர் ஆற்றிய சொற்பொழிவு அமெரிக்கர்களை எவ்வளவு கவர்ந்து விட்டது தெரியுமா? என்றெல்லாம் மார் தட்டிப் பேசும் இந்துமதப்பக்தகோடிகளே இப்பொழுது என்ன சொல்கிறீர்கள். அதோ அதேஅமெரிக்கர்கள் சொல்வதுடன் நின்றுவிட வில்லை. உங்கள் மத யோக்கியதையில் எவ்வளவு பெண்மக்கள் வாடுகிறார்கள் என்பதைப் படமே பிடித்துவிட்டார்களே. படத்தைப்பார்த்தோர் உங்கள் இந்துமத மேன்மை(?)யை வாயாரப் புகழ்வார்களல்லவா?

சந்தைக்குச் சென்று பல், சுழி, நடை, தோற்றம் முதலியவற்றைப் பார்த்து மனசுக்குப் பிடித்த மாடொன்றை வாங்கிவந்து அதற்கு மூக்கணாங் கயிற்றை மாட்டி, புதியதோ அல்லது இன்றோ நாளையோ அச்சு முறியக் காத்துக் கிடக்கும் வண்டியோ எதிலாவது பூட்டி இஷ்டம்போல் சவாரி செய்வதைப் போன்று ஒரு ஆண்மகனின் தாய் தந்தையரோ அல்லது உற்றாரோ வேறொரு வீட்டிற்குச் சென்று பெண்ணை நன்றாகச் சோதித்து மனதுக்குப் பிடித்திருந்தால் மாட்டைப்போன்று நகை முதலியவற்றைப்பற்றி பேரம் பேசி முடித்து அந்தப் பெண்ணாகிய மாட்டை (அவர்கள் கருத்துப்படி) தாலியெனும் மூக்கணாங்கயிற்றைமாட்டி வண்டியைப்போன்று தங்கள் மகனுடன் வாழும்படி சேர்த்து விடுகிறார்கள். அவன் கிழவனாயிருந்தாலும் சரிதான், அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் மாடு மட்டும் நல்லதாகயிருக்கவேண்டும்!

அமெரிக்க நாட்டைப் போன்று இங்கே பெண்கள் தங்கள் மனம் விரும்பியோரை மணம் செய்துக் கொள்ளமுடியுமா? அதுகூடவேண்டாம், வயதுவந்த பெண்களைத் தாராளமாக நடமாடவாவது விடுகிறார்களா? மாட்டைத் தொழுவத்தில் அடைப்பதைப் போன்று கோழியை பஞ்சரத்தில் மூடிவைப்பதைப்போன்று நாயைச் சங்கிலியுடன் பிணைப்பதையொத்து பெண்ணினம் நான்கு சுவர்களுக்கிடையில் சிறைவைக்கப்படுகிறது. சாளரத்தின் ஊடே எல்லையற்ற வானத்தை நோக்கினாலோ தன் சிறைக்கப்பால் வெளியுலகத்தைச்சற்று பார்த்தாலோ பாழும் சமுதாயம் பழிச் சொல்லை வாரி வீசுகிறது.

இன்னும் என்னென்ன கொடுமை! அவ்வளவையும் சொல்லப்புகின் கட்டுரை விரியும். விலங்கினங்களுக்காவது சற்று உரிமை கிடைக்கிறது. தன்னிச்சையாகத் திரிய. பாவம் பெண்களுக்கு அதுவும் கிடையாது. கணவன் முன்னிலையில்கூட அன்னியன் ஒருவனுடன் பேச முடியாது. சிறை மட்டுமல்ல. கடுங்காவல் தண்டனை கணவன் இறந்தாலோ அவனுடனே அவள் தன் இன்ப உணர்ச்சிகளையும் எரியிட்டுவிட வேண்டும். மேனாடுகளில் உண்டா இக்கொடுமை, பின் ஏன் அமெரிக்காவில் இந்தியா பேசாது?

(தொடரும்)

'உடுமலை பீரங்கி'

வாரமிருமுறையும் அத்துடன் தெலுங்குப் பதிப்பும்

சீக்கிரமே வெளிவரும்.

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை.

இப்போதுள்ள "உடுமலை பீரங்கி" ஏஜெண்டுகளும் புதிதாக விண்ணப்பித்துக் கொள்ளல் அவசியம்.

நிர்வாகி,

"உடுமலை பீரங்கி"

சென்னை 3.

பெண்ணுரிமை கிட்டாததற்கு ஆரியமே-முட்டுக்கட்டை.

(ஈரோடு S. சரோஜா.)

ஆம்பூர் ஜமீன் அப்பாதுரை என்றாலே அகில மெங்கும் அறியும். அத்துடன் அவர் கழகத் தலைவரும்ஆவார். அவருக்கு மங்கையர்க்கரிசி என்ற மனைவி இருந்தாள். அவளும் அன்பின் அத்தாட்சியாக மதியழகி என்னும் பெண் மகவை அளித்துவிட்டு இயற்கை எய்தினள். அப்பாதுரை தன் செல்வக் குருந்தையை அன்புடன் வளர்த்து பள்ளிக்கும் அனுப்பி வைத்தார். அவளும் 5-ம் படிவத்தை எட்டிவிட்டாள். அத்துடன் கல்வி போதுமென்று வீட்டுச் சிறையிலேயே அடைத்துவிட்டார். மதியழகியோ தன் எண்ணம் நிறைவேறவில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். அவள் 5-ம் படிவத்திலேயே ஓர் அறிவுள்ள ஆடவனையும் தேர்ந்தெடுத்துவிட்டாள் என்று அப்பாதுரை அறிவாரோ?

எழில் மணி என்பவன் ஓர் சீர்திருத்தவாதியின் செல்வப் புதல்வன். ஆனால் ஏழ்மை என்னும் முள் வேலி அவனது மேல்படிப்புக்கு தடையாயிருந்தது. வறுமையால்-வாடாமலும்-ஏழ்மையால் ஏமாறாமலும் கழகத்திற்குத் தொண்டு செய்து வந்தான். மதியழகியை நினைக்கும் பொழுதெல்லாம் அப்பாதுரையின் உருவம் வந்து முன்னால் நின்று இவன் சிந்தையை சிதறடிக்கும். ஆனால் தன் கடமையே பெரிதென நினைந்து தாய் நாட்டிற்கு தயங்காது, சலியாது உழைத்து வந்தான். தன் மகன் கலியாணத்திற்கு அப்பாதுரை அக்கரைஎடுத்துக்கொண்டு அலைந்தார். கடைசியாக இவரைப் போலவே ஜமீன் ஒருவர் அகப்பட்டார். வயது அதிகமில்லை 65 தான் அப்பாதுரை எல்லோரையும் வரவழைத்து திருமணத்திற்கு நாள் குறித்து தாம்பூலம் அளித்துவிட்டார்.

மதியழகி மனம் வெடித்து விடும் போல் இருந்தது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள்போல் எழுந்து அப்பாவிடம் சென்று மன்றாடுவோம் இல்லையேல்-மடிவோம் என்ற உறுதியுடன் சென்றாள்.

அப்பா: கடைசியாக ஒரு வார்த்தை இக்காலத்தை நினைத்துப் பாருங்கள். எவ்வளவோ முன்னேறி நாகரீகம்தலை சிறந்து விளங்குகிறது நம் தென்னாடு. அப்படியிருக்க இன்னும் பணப் பேய் குடி கொண்டிருக்கிற காரணத்தினால் என்னை அவருக்கு மணம் செய்து தர இசைந்துவிட்டீர்களே. நியாயமா? வாழவேண்டியவள் நான்தானே அப்பா. ஆதலால்.........

மதியழகி, பிடிவாதம் செய்யாதே ஊருக்குத்தான் சீர்திருத்தமே அல்லாமல் நமக்கல்ல. அப்பா! அப்பா! இப்படி போலி வேஷம் போட்டு ஊரை ஏன் ஏய்க்கிறீர்கள்? அறையில் ஆடித்தானே அம்பலத்திற்கு வரவேண்டும். நம் வீட்டில் சீர்திருத்தம் இல்லை. நாட்டிற்கு சீர்திருத்தம் செய்ய முன் வந்துவிட்டீர்கள். ஊரார் நாலுபேர் அறிந்தால் நீங்கள் தலையை வெளியே நீட்ட வேண்டியதில்லை.

மதியழகி, அப்பேர்ப்பட்ட நிலைக்குத் தானே அஸ்திவாரம் போடுகிறாய்?

இல்லவே இல்லையப்பா, தற்போதிருக்கும் நிலையை சரிக்கட்டினால், உலகம் உங்களை இன்னும் கௌரவிக்கும். புகழ்மாலையால் உங்களை போற்றிப் புகழ்ந்துவிடும் அப்பா.

இப்பொழுது என்ன செய்யச்சொல்லுகிறாய் மதியழகி? உங்கள் வாயால் ஓர் வார்த்தை இது ஒன்றுதான் நான் கேட்கும் கடைசி வேண்டுகோள். பிறகு எந்த உதவியுமே வேண்டவே வேண்டாம் அப்பா. அப்பா யோசித்துப்பாருங்கள். அவரும் படித்தவர். சகலத்திலும் உயர்ந்தவர். பேச்சிலே வில்லன் என்று பெயர் எடுத்தவர். சீர்திருத்தத்திற்காக தன் உயிரையும் கத்தி முனையில் நிற்க வைத்து போர் புரியக்கூடிய வல்லவர். சீர்திருத்த அணியிலே ஏறிவந்தவர். ஆனால் சாதிக் கொடுமை என்ற படுகுழியிலே வீழ்ந்தார். இப்பேர்ப்பட்டவரை நான் அடையப்போவது நான் செய்த பாக்கியமே பாக்கியம். அப்பா, ஏன் இன்னும் மௌனம் சாதிக்கிறீர்கள்.

இருக்கலாம் சமூகம் ஒத்துக்கொள்ளவேண்டுமே கண்ணே.

சமூகம்? சமூகம், சாஸ்திரங்களின் கொடுமையால்தான் நம் புனிதமான தென்னாடே, புயலில் அகப்பட்ட படகுபோல் தத்தளிக்கிறது அப்பா. ஆனால் நம் இருகண்போன்ற தலைவர்கள் அல்லவா துடுப்புபோல் காப்பாற்றுகிறார்கள்.

சமூகத்தில் பிளவுபட்டுப் போனவர்கள் அநேகர் !

சமூகக்கொடுமைக்கு பலியுண்டவர்கள் அநேகர் !!

சமூகத்தின் சுழலிலே சிக்கித் தடுமாறிப்போனவர்கள் அநேகர்!!!

ஆதலால் ஓர் முடிவுக்கு வாருங்கள் அப்பா.

முடியாது-மதியழகி முடியாது.

அப்பா அப்பா என்ன சொன்னீர்கள்? இதுதான் உங்கள் முடிவா? இது உங்கள் சுய அறிவைக் கொண்டு செய்த முடிவா? அல்லது சண்டாள சமூகம் செய்த சூழ்ச்சியின் முடிவா? சாஸ்திரத்தின் உத்தரவை எதிர்பார்ப்பது எவ்வளவு மதியீனம்? ஐயோ! நினைக்க முடியவில்லையே. நாங்கள் கட்டின மனக்கோட்டை யெல்லாம் ஓர் நொடியில் தகர்த்தெறிந்து விட்டீர்களே.

மதியழகி! என் இஷ்டப்படி வாழ்ந்தால் வாழ்வு. இதுதான் என் ஆசி. இதுதான் என் முடிவு அப்பா! அப்பா!! மறுபடியும் சிந்தியுங்கள், ஓர் சீர்திருத்தவாதியின் கருத்துகள் நம் கல் நெஞ்சையும் கரையும்படி செய்கிறதே. இன்றைய சமூகத்திலே—கலப்பு மணத்திற்கு இடமில்லை. காதல் வாழ்வுக்கு இடமில்லை. சீர்திருத்தம் வாயளவிலும் ஊருக்கும் தானேஒழிய நம்முடைய குடும்பத்திற்கு அல்ல என்பதைநிரூபித்து விட்டீர்களே அப்பா.

அதிகம் பேசாதே இதற்குத்தான் பெண்களுக்கு கல்வி ஆகாது என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள் உன்னை வைக்கவேண்டிய இடத்தில் வைத்திருந்தால் இப்படி பேசுவாயா?

அடுத்த நாள் ஆம்பூரில் ஓர் கழகக் கூட்டம் ஒன்று நடந்தது. அங்கே எழில்மணியும் மதியழகியும் அண்ணாவின் தலைமையில் கலப்புமணம் செய்து கொண்டனர். அப்பாதுரை என்ன செய்வார். அவரும் கூடவே யிருந்து சிறப்பாக நடத்தினார். அவ்வூரில் இதுதான் முதல் கலப்புமணம் ஆதலால் எல்லோருக்கும் ஒருநாள் உணவு அளிக்கப்பட்டது. பிறகு இல்லறம் இன்பமாகவே நடத்தினர். ஓர் நாள் அவ்வூர் பெண்கள் கூட்டத்திற்கு மதியழகியை தலைமை தாங்கும்படி கேட்டுக்கொண்டனர். அதன்பேரில் அவர்களும் இசைந்து தலைமை தாங்கினார்.

பரிவிற் சிறந்த தாய்மார்களே பெறுதற்குரிய சகோதரிகளே இன்று நாம் பேசுவது பெண்ணுரிமை. அதாவது உரிமை என்றாலே சர்வசுதந்திரமும் உண்டு என்ற பொருள். அதே போல் எல்லா இனவாக்கத்திற்கும் உண்டு. அதற்கு நாமும் விதிவிலக்க மானிட வர்க்கத்திலே அதுவும் பெண்களுக்கு பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் ஆரியம்தான். பெண்களை எவ்விதத்திலும் முன்னேற முடியாதபடி [திராவிடப்பெண்களை] சாஸ்திரத்தின்பெயரில் கற்பு என்ற ஏற்படுத்திமுட்டுக்கட்டைபோட்டுவிட்டான். ஆதியிலே நம் பெண்கள் அரசாட்சி நடத்தினார்கள். கல்வியிலோ ஆண்களைவிட பெண்களே அதிகம் கற்றறிந்திருந்தார்கள். தன்கணவனை தானே தேர்ந்தெடுக்கும் உரிமைபெற்றிருந்தார்கள். சகலவிதத்திலும் ஆண்களும் பெண்களும் சரிநிகராக வாழ்ந்துவந்திருக்கிறார்கள். அதற்கெல்லாம் அசைக்க முடியாத ஆதாரம் இருக்கிறது. ஆதியிலே தாலிகட்டும் வழக்கமில்லை. ஆனால் இன்னும் நாகரீகத்திலே தாலிகட்டும் வழக்கம் தலை சிறந்து தலைவிரித்தாடுகிறது. தாலிகட்டுவதும் அவமானப்படுத்துவதும் ஒன்றேதான். அதனால் இந்த மடைமையை மண்டியிடச்செய்ய வேண்டும். இன்றைய சமுதாயத்திலே நமக்குஉரிமைஇல்லை. விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் உள்ள உரிமை இன்று பகுத்தறிவுள்ள பெண் இனத்திற்கு உரிமை இல்லை. பெண் இனம் அடிமையின் சின்னமா? அல்லது ஆண்களின் கைப்பாவையா? பெண்களின் உரிமை எவ்வளவு பறிபோகப் படுகிறது என்று கவனியுங்கள். இன்று நாம் புலம்பவேண்டிய நிலையில் இருக்கிறோம். அதுவும் வாழ் நாள்

(தொடர்ச்சி 5-பார்க்கம் பார்க்க)

திராவிடமும் ஆரியமும்.

(எ. ஜெயராமன்)

★

சூது வாது மேது மறியாது
பாங்குடன் வாழ்ந்த பைந்தமிழ் நாட்டில்
ஓதும் புரோகிதம் புகுத்தது முதலே
தாழ்ந்தது தமிழே, தலையெடுக் காமல்!

திகழுடன் பொழிந்த திராவிட மக்கள்
ஒளி மங்கின ரோராயிரம் சாதியால்
புகழுடன் சிறந்த புவியோராம் - நமை
ஒதிக் கினர் சேரியில் தீண்டாமையால்!

ஆடு மாடை அடித்துக் கொன்று
தின்று பயின்ற ஊதாரிக் கூட்டம்
ஓங்கார முடன் உல்லாச மாக
அக்கிரகாரந் தன்னில் வாழ்வை சிறக்க!

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
என்றே இருந்த இந்நாட்டு மக்களுள்
உண்டாக்கினர் முப்பத்து முக்கோடி தேவரும்
என்பத் தோராயிரம் கடவு ளருமாம்!

பிழைக்க வந்த புரோகிதக் கூட்டம்
பிறந்தனராம் பிரமன் முகத்தி லாம்
மழைபெய்து களிப்புடன் வாழ் திருவிடத்தோர்,
பிறந்தன ராம் பிரமன் காலிலாம்!

சண்டாளப் பார்ப்பனீயம் நம்மை விட்டு
எந் நாள் துலையுமோ - பூண்டோடு
இந்நாட்டைவிட்டு, மனிதனை மனிதனாக மதிக்கும்
மாண்புறு நாள் மலரு மென்றோ!

அறிவிப்பு

பணம் அனுப்பத் தவிர்ந்த நேயர்களின் பெயர்கள் அடுத்த வாரம் வெளிவரும்.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்

வாரப்பதிப்பு

சென்னை	சனி	9—4—49

ஓமந்தூரார்

ஆம். நாம் என்னசெய்யமுடியும்? வேதனை யடைவதைவிட, வருந்துவதைவிட, கண்ணீர் விடுவதைவிட வேறென்ன செய்யமுடியும்? ஆம்! மழையைக் காணா பயிர்போலும் தாயைக்காணாச் சேயைப் போலும் தடுமாறி தத்தளிக்கிறோம். இவ்வளவுதானா? எவ்வித காரணமுமின்றி திடீரென பத்திரிகையை முடக்கவேண்டுமென்ற ஒரே காரணத்தால் அச்சகத்தார், 'லிபரேடர்' அச்சகத்தார், கருணைமிக்க அச்சகத்தார், பத்திரிகையை பதிப்பித்துத் தர முடியாதென நிறுத்திவிட்டபோது நாம் அடைந்த மனவேதனையைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாகவேயடைந்து புழுவாய்த் துடிக்கின்றோம் எனச் சொன்னால் நேயர்கள் நம்பவேண்டுமென்றே கேட்டுக்கொள்ளுகிறோம். அரசியல் சூழ்ச்சிக்குப் பலியான ஓமந்தூரார் தமது மந்திரிப்பதவியை ராஜினாமா செய்துவிட்டு. தான் வசித்துவந்த சர்க்காரின் விடுதியைக்காலிசெய்து தன் சொந்த ஊரான ஓமந்தூருக்குச்சென்றார் என்றசேதியைக்கேட்டதும் நாம் எம்மையும் அறியாமல் ஒருவித சங்கடத்துக்கு ஆளானோம்

"அரசியல் என்பது முதல் தர சூதாட்டம்" என்றே பலமுறையும் சொல்லி வந்துள்ளோம். அவ்வித சூதாட்டத்தில் ஓமந்தூராரைப் போன்ற உத்தமர்களுக்கும் யோக்கியர்களுக்கும் இடமில்லைஎன்பதை அவருடைய ராஜிநாமா எடுத்துக் காட்டிவிட்டது. மற்றவர்கள் அயோக்கியர்களா என்னும் வாதத்தை எழுப்பலாம். அவ்வித பொருளுக்கு இடந்தரலாகாது என மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறோம். யோக்கியப் பொறுப்புகளிலும் நாணயத்திலும் ஓமந்தூரார் போன்று நடந்து கொள்ளல் முக்கியம் எனமாத்திரம் தெரியப்படுத்திக்கொள்ளுகிறோம்.

நாம் ஏற்கனவே எழுதிவந்தபடி ஓமந்தூராரைக் கவிழ்க்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தால் தான் காரியங்கள் நிறைவேறின என்பதற்கு இப்போது அமைந்திருக்கும் மந்திரி சபையே போதுமான அத்தாட்சியாகும். முன்னிருந்தமந்திரிகளில் பிரதமர் உள்பட மூவரைத் தவிர மற்றயாவரும் ஓமந்தூராரின் மந்திரி சபையில் இருந்தவரேயாவர். அப்படியிருக்க இம்மூவர் மாத்திரம் என்ன பிசகு செய்துவிட்டார்கள். எந்தவிதத்தில்சட்சித் திட்டங்களை நிராகரித்தார்கள்? தம் இனத்தின் நலனையும் பறிகொடுக்கும்அளவில்லலவாகாங்கிரஸ் சட்டதிட்டங்களை புகழ்ந்தும்போற்றியும் பின்பற்றியும் வந்தார்கள். தன்நாடு தன் குடும்பம், தன் இனம், தன் நாகரீகம், தன் தாய்மொழி, பொருளாதாரம் சகலமும் நிலை குலையும் அளவுக்கல்லவா பணிந்து கொடுத்தார்கள். பிறர் கை கொட்டிநகைக்கும்படியான நிலையில்தானே பிறசக்ஷிகளைத் தாக்கியும் தூத்தியும் வந்தார்கள். அப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்க இவர்கள் மாத்திரம் மேலிடத்து அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரங்களாகாத காரணமென்ன? இவர்கள் விரட்டப்படவேண்டிய மருமமென்ன?

இதற்கெல்லாம் ஆதிகர்த்தராகவும் மற்றவர்களின் விஷமங்களுக்கு உடந்தையாகவும் இருந்து வந்தவர் ஒரு திராவிடரே என்றால் அவரை நாம் என்னென்று கொள்ளுவதென்றுதான் தெரியவில்லை. இருக்கட்டும். அத்தகைய காமராஜர்களும் சொக்கலிங்கங்களும் திருந்தி, உண்மையை அறிந்து, இதுவரை ஏமாந்து தன் இனத்தாருக்கு கெடுதிகள் பல செய்தும், தன் நாடு முன்னேறாத வண்ணம் பல இன்னல்கள் ஏற்பட துணை புரிந்துவந்ததையும்யெண்ணி, வெட்கத்துடன் தலை குனிவதல்லாமல் தன் இனத்துடன் சேரும் நாள் வெகு தூரத்திலில்லை என்பதை அன்னவர்கள் இப்பொழுதாவது அறிந்து தம்மை உடனுக்குடன் திருத்திக்கொள்வார்கள் என்பது எமது நம்பிக்கை மாத்திர மல்ல. ஆனால் எம்முடைய வேண்டுகோளுமாகும்.

"கிளர்ச்சி"

காரணம் எதுவாயினும்பொறுப்பு எத்தகையதாயினும், அடையும் நஷ்டம் எவ்வளவாயினும் பத்திரிகை அளவில்லா வளர்ச்சியடைந்திருந்தும், எதையும் பொருட்படுத்தாமல் திராவிடர் தழகத்தின் மாபெரும் தலைவரான 'பேரியார்' அவர்களிடத்தி லிருந்து உத்தரவு பிறந்ததும், ஏதொரு சமாதானமும் எடுத்துரைக்க முன் வராமலும், நியாயாநியாயங்களை எடுத்துக் காட்டாமலும் தளபதியின் சொல்லுக்கு சரியான வீரன் கட்டுப்படுவதுபோல "கிளர்ச்சி" யின் நிர்வாகஸ்தர்கள் பத்திரிகையை நிறுத்திவிட்டதென்பது திராவிடர் கழகத்தின் அந்தஸ்தை எவ்வளவு உயர்த்திவிட்டதென்பதையும் தலைவருக்கு மற்றவர் எவ்விதம் கட்டுப்படுகிறார்கள் என்பதையும், கட்சிக்குள் எவ்வளவு கட்டுப்பாடும், பொறுக்கும் தன்மையும், விட்டுக்கொடுக்கும் மனப் பான்மையும் வளர்க்கப்பட்டிருக்கிற தென்பதையும் உலகுக்கு எடுத்துக்காட்டிவிட்ட நற்சந்தர்ப்பத்தையும் பேரும் புகழையும் அடைந்துவிட்டதுடன், வருங்காலசரித்திரத்தில்தக்கதோர் இடமும் நிருவாகஸ்தர்கள் பெறுவர் என்பதை அன்னவர்களுக்குத் தெரியப் படுத்திக் கொள்வதுடன் நிர்வாகஸ்தர்களின் இத்தீரச்செயலை மனமாரப் போற்றுகின்றோம்.

(முதல் பக்கம் தொடர்ச்சி)

அவர் கழகத்தின்மேல் மாசு மறுவற்ற அன்புகொண்டிருந்தார் என்பதனைத் தெற்றெனக் காட்டுகின்றது இது. "இன்று அரும்பெரும் செயலாற்றும் ஒரு சாக்ரடீசைக் கண்டோம். அவர்தான் நம் ஈ.வே. இராமசாமிப் பெரியார்." இது அழகிரிசாமி யவர்கள் தலைவர்க்களித்த மரியாதை.

வாழ்நாளெல்லாம் மக்களுக்காகவே உழைத்த அழகிரிசாமியின் பூத உடல் மறைந்துவிட்டது. புகழுடல் என்றென்றும் எங்கெங்கும் நிலைத்திருக்கும். அவருடைய உழைத்துச் சலித்த உடல், தொண்டாற்றித் தளர்வுற்ற உடல், வறுமையில் வாடிவதங்கிய உடல், நோயால் நொந்த உடல் கல்லறையை எய்திற்று. ஆனால் அவர் பரப்பிய கொள்கைகள் மக்களின் மனத்தில் கோயில் கொண்டுவிட்டது. திராவிடர் போராட்டத்தில் பணியாற்றி உயிர்நீத்த தியாகிகளின் முன்னணியில் தளபதி வீற்றிருக்கிறார். திராவிட சரித்திரத்தில் அவர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. அவர்காட்டிய வழி அவர் ஆற்றிய தொண்டு, அவர் செய்த பணி, அவர் நடத்திக்காட்டிய முன்மாதிரியான வாழ்க்கை திராவிடம் உயர திராவிடர்களை ஊக்குவிக்குமாக எதன்பொருட்டு உழைத்தாரோ அத்திராவிடம்முழு உருவுடன் விளங்கும் காட்சியைக் காணும்பேறு பெற்றிலர். தளபதி அழகிரிசாமி யவர்கள். அவர் எண்ணியெண்ணி ஏங்கிய இன்பத் திராவிடம் எய்தப் பணி புரிவதே திராவிடர்கள் மறைந்த மாவீரருக்குச் செய்யும் நன்றியாகும்.

தமக்கினியர் அழைப்பினும் பின்னோக்காது முன்னோக்கி மக்கள் நலனுக்காக உழைக்க முன்வரும் கணக்கிலா இளைஞர்கள் தேவை என்பது தளபதியின் கனவு. கனவு நனவாகும் இந்நாளைக்கண்டு களிக்க அவரில்லை. நாமிருக்கிறோம். அவரளித்த நன்மையை நுகர்கின்ற நாம் அவர் வறுமையில் தவிக்கவிட்டுச்சென்ற அவரின் குடும்பத்தார்க்கு நம்மாலியன்ற உறுதுணை புரிவது அறிஞர் அண்ணா கூறியபடி அழகிரிசாமி யவர்களுக்குச் செய்யத் தவறியவைகளுக்குச் சரியான கழுவாயாகும். அதனைச் செய்து அவர் குடும்பத்தை ஊக்குவிப்போமாக. அவர் குடும்பத்தில் அமைதி நிலவட்டும்.

ஈடு இணையில்லா அழகிரிசாமியை இலங்குவித்த திராவிடம் அவரை இழந்து இன்னல் கடலில் இறகில்லாப்பறவைபோல் தத்தளிக்கிறது. வாழ்க அழகிரிசாமி! வாழ்க அன்னாரின் தொண்டு!! வாழ்க திராவிடம்!!!

வரப் பெற்றோம்.

குணமணி.

ஆசிரியர், சித்த Dr. M. துரைசாமி. R. I. M. P. ஒவ்வொருவரும் தத்தம் உடல் நலத்தைப் பேண குணமணி. நல்ல வழி காட்டியாக விளங்குகிறது.

காரியாலயம்
குரோம்பேட்டை. S. I. Ry.
(Ch-Dt)

சென்னையில் "நாஞ்சிலரசு"
(வ. இராசன்)
c/o. "உடுமலை பீரங்கி"
33, திருவேங்கட முதலி தெரு
பேரியமேட்டு, சென்னை 3

திருமணரத்து இருதார விவாக தடை மசோதா கவர்னர் ஜனரல் அங்கீகாரம்,

சென்னை சட்ட சபைகளில். நிறை வேற்றப்பட விவாகரத்து இருதார விவாக தடை மசோதாவை கவர்னர் ஜனரல் அவர்கள் அங்கீகரித்து விட்டார்

"உடுமலை பீரங்கி" விற்பனை செய்ய கீழ்கண்ட ஊர்கட்கு முன்பணம் கட்டக் கூடிய ஏசண்டுகள் தேவை.

வேலூர் (வ. ஆ.)
வல்லம்
விருது நகர்
வந்தவாசி
திண்டுக்கல்

நிர்வாகி
"உடுமலை பீரங்கி"
சென்னை 3.

சனாதனமே சந்தி சிரிக்கிறது!

(திருத்தங்கல் கனி)

அறியாமையை அகற்றி உயர்ந்தவனென்ற அகங்காரத்தை ஓட்டி மக்களோடு மக்களாய் உழைப்புத் தரத்தில் பங்கெடுத்து வேலை செய்யுங்கள் இன்றேல் இடமில்லை இந்நாட்டில். கிளர்ச்சி 1.1-49.

கோட்சேவுக்கு ஆதரவளிக்கும் கோட்சே இனமே! கொடுமை புரிந்த கோட்சேயை மறந்து அறிஞர் என்று போற்றப்படும் எங்கள் அண்ணாவைப்பற்றிக் கொண்டீர்களே அவர் பெயர் உங்கள் பத்திரிகையில் இடம் பெறலாமா?

திரைதூதன் 16-2-49.

பார்ப்பனர்கள் என்றால் அவர்களிடம் பார்ப்பனத்தன்மை இருக்கிறது என்கிற வரையில் புரோகிதர்கள் என்பதை தவிர எந்த அகராதியிலாவது ஆதாரங்களிலாவது காட்டமுடியுமா? விடுதலை 18-2-49.

உலக உத்தமராகிய காந்தியாரையே சுட்டுக்கொன்ற பார்ப்பன கோட்சே இனமா மக்களுக்கு நன்மை செய்யப்போகிறது? ஒருக்காலும் செய்யாது.

காங்கிரஸ் M.L.A.வேலுசாமி,

தமிழனின் அறியாமையை முதலாக வைத்து ஆட்டிப் படைக்கும் ஆரியமே உன் முடிவு காலம் நெருங்குகிறது.

உடுமலை பீரங்கி 19-2-49

பிராமணர்களை அதைரியசாலிகள், சோத்துக்கும்பல்கள், நெல்லிக்காய் மூட்டைகள், எனஎண்ணுவது சகஜமே. பிராமணர்களுக்குள் கட்டுப்பாடும், தைரியமும், விவேகமும், நற்குணமும்,பரோபகாரமும், ஒருங்கே அமைந்திருந்தால் ஒருவரும் இழிவாகவும் ஏளனமாகவும் ஒருக்காலும்பேசவேமாட்டார்கள். M. ராகவன். தார்மீகஇந்து6-2-49.

எனது சமூக மானது நாடெங்கும் நாய் போல் அடிக்கப் படுகிறது. காரணம் பிராமணன். உஞ்சி விருத்தி செய்து உலகம் உய்ய வேண்டும். என்று சொல்லிப் பிழைகள் வேண்டியதை விட்டுப் புகையிலையைவாயில் அடக்கிக் கொண்டு சாதியில் உயர்ந்தவன் என்று பேசுவது, மக்களுக்குக்கோபம் உண்டாக்குகிறது.

டி. கே. சீனிவாசன் (அய்யர்

18-2-49. பொதுக்கூட்டத்தில். கைப்பிடி அளவுள்ள "இச் சிறு கூட்டம்" இன்னமும் நம்மை தங்கள் கையிலுள்ள கிழிந்த பஞ்சாங்கத்தைக் கொண்டே அடக்கியாள முடியும் என்றெண்ணுகிறதே இந்த ஆணவத்தை அடக்குவது நமது கடமை அல்லவா?

போர்வாள் 19-2-49

மக்களின் மனக்கொதிப்பிற்கு முன்னால் ஒரு சிறு கும்பலின் இனக்கதறல் என்ன செய்யும்? புரட்சிக்கனலில் அகப்பட்ட துரும்பு புகைந்து சாம்பலாவது திண்ணம். அசைக்கமுடியாத கற்பாறை என்று கருதி வாளாவிருந்தால் உளி கொண்டு உடைத்தெறியத்தயாராகிறான் புத்துலகச்சிற்பி. சேர்ந்து செயலாற்றத்திறனற்றோரே! முட்டுக்கட்டை போடாதீர்கள் முற்போக்கு சக்திக்கு!

திராவிட நாடு 20.2-49.

கோவிலும் தாசியும் இல்லாவிட்டால்அப்புறம்சூத்திரனுக்கும் நமக்கும் வித்தியாசம் ஏது? நாமும் ஏர், மண் வெட்டி பிடித்து பழையபடி ஆடு, மாடு, பன்றி, மேய்க்க வேண்யது தான்.

கோவில் அர்ச்சகர் கருத்து

(3-பாக்கம் தொடர்ச்சி)

முழுவதும். அணுக்கொருநீதி. பெண்ணுக்கொருநீதிவகுத்துள்ளஇந்நாட்டில் நியாயத்தையும் சமத்துவத்தையும் எப்படி எதிர்பார்க்கமுடியும். ஆதலால் சகோதரிகளே சமூகம், சாஸ்திரம் என்று கூறும் சண்டாளர்களுக்கு சாவு மணி அடியுங்கள். கலப்பு மணத்திற்கும்—காதல் வாழ்வுக்கும் வழிகாட்டாத சாஸ்திரத்தை சாகடியுங்கள். சாதிமதம் எனகூறும் சண்டாளர்கட்கு சவுக்கடி கொடுக்க தயங்காதீர்கள் வருங்கால வாழ்வு நமது கையில் இருக்கிறதென்று ஒவ்வொருவரும் உணரவேண்டும்! பெண்தானே என்ன செய்வாள் என்ற பேதமை ஒழியவேண்டும். ஆரியவேதங்களையும்—சாஸ்திரங்தையும் அழித்தொழியுங்கள். பகுத்தறிவின் பாசறையை நோக்கி புறப்படுங்கள். ஓங்குக பெணகல்வி.

வணக்கம்

உடுமலை பீரங்கி

முதற் புத்தகம்

விலை அணா. 6, பக்கம் 120,

தேவைக்கு முந்துங்சுள்.

விற்பனையாளர்கட்கு 25% அளவு தரப்படும்.

1. புத்தகம் வேண்டுவோர் அணா. 7½-க்கு தபால் தலைகள் அனுப்பவும்.

கிடைக்கும் மிடம்

உடுமலை பீரங்கி

33. திருவேங்கிட முதலி தெரு

பெரிய மேட்டு சென்னை. 3.

ஏன் இந்த நிலை?

"இராகம்"

1. எங்கெங்கு காணினும் ஏழ்மையடா அதை
எண்ணி எண்ணி மனம் வேகுதடா—மிக
பொங்குப் புதுப்புனல் போலவே என்னுள்ளம்
பொங்கிக் குமுறித் துடிக்குதடா.

2. உண்ண உணவின்றி உழைத்திடு வோர்எங்க
உண்டு உறங்குவார் ஒருசாரார்—கொடிய
எண்ணந்ரு தீமைகள் செய்பவரே யிங்கு
எடுத்த வேலைக்கெல்லாம் ஐயன்களாம்.

3. கட்டத் துணியின்றி கலங்குகிறார் நெஞ்சம்
கண்கலங்கி ஆவிசோர்ந் திடுவார்—தாமே
நட்டிட்ட கற்களின் பேரினிலே சிலர்
நானூறு முழங்களை மறைத்திடுவார்.

4. நிற்க நிழலன்றி நிலைகுலைந்து மக்கள்
நெஞ்சம் இடிந்து கலங்குகையில்—ஒரு
வெற்பினை ஒத்த மனைகளிலே யிங்கே
ஒருவர் இருவரே வாழ்ந்திடுவார்.

5. வற்றிய தாயின் முலையுறிஞ்சி பிள்ளை
வறண்ட தாயினது முகம்நோக்கி—கந்தல்
பற்றி இழுக்க ஒருபக்கம் குடம்கோடி
பால்சாய்ப்பார் "பரமன்" பேரினிலே.

6. உரிமை கேட்கமக்கள் கூட்டிடும் கூட்டத்திற்
குரிமை இல்லைஇது குடியரசாம்—மிக
பெருமையாக பேசிபறை சாற்றுகிறார் வீணர்
பெற்றுவிட்டோம் "சுயராஜ்யம்" என்றே.

7. வாழப் பிறந்திட்ட மக்களுக்கே இங்கு
வனப்பத்துடன் வாழவோர் வழியுமில்லை—பல
சூழ்ச்சிகள் செய்து சிதைத்திடுறார் செல்வம்
சிறுமை மிக்கசிறு கூட்டத்தாரே.

8. காவிரியெனில் எங்கு காய்க்கு தென்பான் ஆறு
கங்கையென்றால் புண்ணிய நதியென்பான்—தமிழன்
ஏவிய பணியசெய்வேன் பராபர மேஎன்று
ஏய்க்கத் தக்கதோர் நிலையிலுள்ளான்.

9. பெற்ற பிள்ளைகளின் கணக்கறியா பித்தன்
பேசிடுவான் புராணக்கதைகள் எல்லாம்--இங்கு
உற்ற இடுக்கணை களைந்திட நினையாது
வீடொன்றுண்டாம் அதைநாடி நிற்பான்.

10. தாய்மொழி தழைத்திட வழியேயில்லை இன்று
தண்டமிழ் பாங்கும்நம் நாட்டினிலே—சற்றும்
வாய்மை என்பதே வற்றிட்ட வஞ்சகர்
வலிய நுழைக்கிறார் இந்தியினை.

11. தேனினும் இனிய தமிழைச் சிதைத்திட
தேடுகிறார் இந்தி புகுத்தும்வழி—பெரு
வான்புகழ் 'தமிழ்த்தாய்' அரியணையிலே இங்கு
வந்தமொழி இந்தி அமர்ந்திடவோ.

12. பொன் விளையும் நந்நாட்டினிலே மக்கள்
பொறுமுகிறார்வேளை உணவினுக்கே—விளையும்
பொன்போகும் வழிஏதோ புரியவில்லை கேளா
புதுமை ஈதேஇந்த பாரினிலே.

13. அறிவுமுண்டு ஆட்சித் திறனுமுண்டு மேலும்
அனப்பற் கரியபல வளமுமுண்டு—ஒன்றாய்
செறிந்து நிற்கும்நல்ல ஒற்றுமை இன்மையால்
சீர்குலைந்து மக்கள் சிதைந்திடுறார்?

14. வீசிடும் புயலுக்குப் பின்னரங்கே(ஆ)சான்றோர்
விரும்பிடும் நல்லதோர் அமைதியுண்டாம்—என
பேசியே சிறிதுபொருத் திருப்போம் என்றும்
துன்பப்பட்டார் இந்த உலகிலில்லை.

வேதனை உள்ளத்துடன் கூறினோம் பகுத்தறிவுகொண்டு கூறினோம்—பாய்ந்தார்கள் — பணிந்தோம் — அதனால் கிடைத்த பரிசு இரத்த ஓட்டம் கும்பகோணத்திலே, சிறை பொறுத்தோம். இம்மட்டுமா? இன்றும் - 'இந்தி எதிர்ப்புமறியல்' நாள்தோறும் சென்னையிலே. இதைக் கண்டு தூற்ற, மக்கள் மனதை மாற்ற "அரசியல் கிளர்ச்சி" என அர்த்தமற்ற பேச்சை பேசுகிறார்கள். அரசியல் கிளர்ச்சிக்கு இந்தியைத்தானா எதிர்க்கவேண்டும். அந்த அரசியலை கைப்பற்ற தண்டவாளத்தையும், தபால் நிலையத்தையும் காண்பித்தவர்கள் இவர்கள். இது இருக்க. இந்தி எதிர்ப்பிலே நாம் ஈடுபட தேவை இல்லை என கூறுகின்றோம் உண்மையாக கூறுகின்றோம் தமிழைப்பற்றியோ இவர்களுக்கு அன்பும், அக்கரையும் இருக்குமானால் இவர்களாலேயே வைக்கப்பட்ட இந்தியால் தமிழ் கெடாது என மக்கள் முன்பு மாநாடு கூட்டி மார்பிலே கைவைத்து கூறட்டும்.

தமிழும் - இந்தியும்

(முத்து-சுப்பிரமணியன்)

மங்கை ஒருத்தி தரும்சுகம்-எங்கள் மாத்தமிழுக்கு ஈடில்லை என்றுரைப்போம்."

என அருமையாக நம் செந்தமிழின் உயர்வைப்பற்றி நம் புரட்சிக் கவிஞர் விளக்கி விட்டார். மங்கை ஒருத்தியிடம் மனிதன் அடையும் இன்பத்தைவிட மங்காத மாபெரும் நல் இன்பம் எம் தமிழ் மொழியிடம் உண்டு என கண்டு மக்களுக்கு எடுத்துக்காட்டிவிட்டார். அமிழ்தினும் இனிய அழகிய தமிழே, தேனினும் இனிய தமிழே!! மூவேந்தர் வளர்த்த முத்தமிழே!!! குறள் கண்ட தமிழே நீ வாழ்க! எனினும் இன்றைய உன் நிலை என்ன! அழியும் நிலைக்கு அறிகுறியாக. ஜலம்—பரிக்ஷை—சினிமா—பேப்பர் போன்ற பல வார்த்தைகள் படித்தவர்கள் முதல் படிக்காத பாமரர்கள் வரை பேசி பழக்கப்பட்ட வழக்கமான பல மொழிகள், இங்கிலையிலே இந்நாட்டுக்கு பொது மொழிதேவையாம். (தாய்மொழி) தனித்தமிழின் தன்மை உணராத தற்குறிகளுக்கு "பொதுமொழி" அதுதான் வடவரின் இறக்குமதி. இந்நாட்டின் பொது மொழியாம் "இந்தி" இது தேவையா? இதில் என்ன நீதி கண்டார்கள் இவர்கள். பொது மொழி ஒன்றுமே தேவையில்லை என எண்ணங்கொண்ட நாளிலே எங்கள் தமிழ் தாழ்வுற்ற நிலை அடைகின்றது பத்தாததற்கு பத்தாம் பசலி மொழி சந்திசிரிக்கும் இந்தி எங்கள் பொது மொழி ஆக்கப்பட்டால் எங்கள் தமிழ் 'பகலவனைப்பார்த்த பனிபோல்' மறையும் என்பதை மறக்கவும் முடியாது மறக்கவும்முடியாது மனித அறிவு படைத்தவர்களால்,

அன்று ஆட்சியாளர்கள் எந்த பாரதிக்கு மணி மண்டபம் கட்டி செய்தித்தாள்கள், வானொலி முதலியன வாயிலாக கூத்தடித்தார்களோ, மகிழ்வுகொண்டார்களோ, புகழ்ந்தார்களோ அந்தபாரதியின். விருப்பம் என்ன?

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"!

இந்த அடிகள் ஒரு சில சினிமா நடிகைகள் இனிமையாக பாடுவதற்குத்தான் பயன் பட்டதே ஒழிய பகுத்தறிவுக்குப் பயன் படவில்லை. சிறு நாட்டிலே பரவுவதற்கு நாதியற்ற நாளிலே பெரு உலகில் பரப்ப வழி செய்ய வேண்டுமாம். பாரதி கருத்து ஒழிக! என் அவர்கள் சொல்லவில்லை. செய்கையே காட்டுகிறது "இம்மட்டுமா பாரதியார் கூறினர்!

"சேம முற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!"

என அவர் கூறினர். அவரைப் போற்றி நிதி, மணி மண்டபம்; மற்றோர் பக்கம் சேமமடைய இந்தி மொழி தமிழின் தலைமீது. பாரதியின் எண்ணம் முறியடிக்கப்படுகிறது அவர்களாலேயே.

அறிவுள்ள ஆங்கிலம் இந்நாட்டில் அடுப்பங்கரை வரையில் புகுந்த பொழுதுங்கூட தமிழ் தாறுமாறாகப் பேசப்படும் பொழுது இழிவு கெட்ட இந்தியால் இன்னல் அடைவதைத்தவிர வேறு என்ன வழி காண முடியும்? இம்மாகாணத்தில் புகுத்தப்பட்ட இந்தியால் தமிழ் தாழ்நிலை அடையும். அழியத்தான் அழியும் என அறிஞர்கள் அநேகர்கூறுகிற நாளிலே "பிடித்த முயலுக்கு மூன்றே. கால்" என சாதிக்கும் சண்டித்தனத்தை விடமறுக்கிறார்கள்.

எங்கள் திரு. வி. காவைவிட தமிழின் தத்துவத்தை அறிந்தவர்கள் அல்ல இன்றைய ஆட்சியாளர்கள்.

மறைமலை அடிகளாரைவிட மறத்தமிழின் தன்மையை உணர்ந்தவர்களல்ல; எங்கள் தலைவர் பெரியார் ஈ. வே. ரா. வைவிட இவர்கள் தமிழின் தன்மையைப்பற்றி தெரிந்திருக்க முடியாது; எங்கள் தளபதி அண்ணாவைவிட அறிவு அதிகம் கொண்டவர்களல்ல, தமிழைப்பற்றி எங்கள் புரட்சியின் சின்னம் பாரதிதாசனைவிட அதிகம் அறிந்தவர்களல்ல ஆளவந்தார்கள். ஆணவத்தாலோ, புரியாமலோ, தெரியாமலோ அறியாமலோ அனைத்தை இந்தியை இந்நாட்டு பொது மொழி என கூறி வைத்துள்ளனர். வேண்டாம் என கூறமுடியுமா? கெடாது என பேசலாம் சட்டசபையிலே, அதை ஒரு சில எடுபிடி ஏடுகள் பிரமாதப்படுத்தலாம். நாடுவிரும்புகிறதா இவர்கள் கொள்கையை. எனவே வேண்டாம் இந்தி என்று புதிய அமைச்சர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நன்றாகச் சிந்தித்து முடிவுசெய்யுங்கள் அதற்காகவே. தலைவர் பெரியார் 190 நாட்கள் வரையிலும் தந்துள்ளார், பள்ளி விடுமுறையைக் காரணம் காட்டி வீணாகக்கொதிப்புற்ற மக்களைக்கொடுஞ்செயல்புரிய தூண்டாதீர்கள்.

அந்தக்காலமும் - இந்தக்காலமும்

"நடன அரசு"

பெரியாரைக்கண்டால் பேசிச்சிரித்தது அந்தக்காலம்—ஈ.வே. ரா. பெரியாரைக்கண்டால் போற்றிப் புகழ்வது இந்தக் காலம்.

அண்ணாவென்றால் யாரென்று கேட்டது அந்தக்காலம்—தளபதி அண்ணாவென்றால் அறிஞரென்றுரைப்பது இந்தக் காலம்.

புதுவைக் கவிஞனைப் புறக்கணித்தது அந்தக்காலப்—கவின்பெறு புரட்சிக்கவிகளைப் போற்றிப் படிப்பது இந்தக் காலம்.

சுனா மனாவைச் சொல்லிச் சிறித்தது அந்தக்காலம்—அறிவிலா *புனா மானாவைப் புறக்கணித்தது இந்தக் காலம்

தமிழைக்கண்டால் இழிவென நினைத்தது அந்தக்காலம்—நம்மொழி தமிழைக் கண்டால் தாயெனப்பணிவது இந்தக் காலம்.

கெடுமதியாளர் தடித்துக் கொழுத்தது அந்தக் காலம்—திராவிட "உடுமலை பீரங்கி" கடுகி சுடுவது இந்தக் காலம்.

குறிப்பு:—*பு. ம.—புராணமரியாதை.

"உடுமலை பீரங்கி"
விளம்பரம் சேகரிக்க திறமையுள்ள ஏஜெண்டுகள்தேவை.
விபரங்கட்கு எழுதவும்.
நிர்வாகி.
உடுமலை பீரங்கி. சென்னை. 3.

சீர் திருத்தம்

(முன் இதழ் தொடர்ச்சி)

அந்தக்காலம் மலர்ந்தால், சிறையின் சுவர்கள் சிதையும்; இருண்ட பாதாளத்திலே ஒளியின் கிரணங்கள் ஊடுருவிச் செல்லும்; வறுமையும் குற்றங்களும் வாரின்றி மடிந்துவிடும். தேவையின் கரங்கள் உணவுக்காக மன்றாட மாட்டா; உலகம் அறிவின் பாதையிலே சுழலும்; பெருந்தன்மையின் போக்கிலே புரளும்; சுதந்திர வாழ்விலே மகிழும்.

மதம் மனிதனை முன்னேற்றாது; அது மனிதனின் விலங்கு.

பயத்தின் போர்வையை நீக்கி, அடிமைத் தனத்தின் விலங்குகளை அகற்றி, வருங்காலததை மகிழ்வுடன் வரவேற்று, நிமிர்ந்து நோக்குவது நலம் பயக்கும் பட்டயம்.

கண்மூடித்தனமான கொள்கைகளிலே கனவு கண்டு கற்பனை செய்யும் தன்மையுடன், கவனக்குறைவையும் புயலிலே விட்டு, மலரும் வாழ்வுக்குப் பூட்டப்படும் விலங்குகளை மறந்து, சிந்தனையைச் சிறைக்கூடமாக்கும் சிந்தையை விரட்டி, பண்டை மங்கையின் முத்தத்திலே மகிழ்ந்து வாழ்வைப் பின்னிழுக்காது வருங்காலத்தின் வர்ணச் சித்திரத்தைத்தீட்டி கடவுள் கூட்டங்களின் பயத்தைப் புறக்கணித்து, இரத்தக் குழல்களிலே சுனை மகிழ்ச்சியுடன் ஓட, பயமற்று வாழ்வதை நான் வரவேற்கிறேன்.

பயனுற்ற செயல்களைப் புரிந்து சிறந்த சிந்தனையை மலரச் செய்து, கற்பனைக்குக் கலைகாணும் அவகாசமளித்து, அடித்தளமுற்ற உண்மைக்காக ஆர்வத்துடன் நிமிர்ந்து நோக்கி, அறிவை அதிகப் படுத்தி, வறியரின் வருத்தத்தை விரட்டி, நீதியின் பக்கலிலே போர்புரிந்து, உலகினை அரண்மனையாகத் திகழச் செய்ய எழுந்திருங்கள்.

இதுவே உண்மையான மதம்!
இதுவே உண்மையான வணக்கம்!!

ஆசிரியருக்கு கடிதம்

ஐயா,

நடுப்பட்டி லெ. தனுஷ்கோடி ரெட்டியார் எழுதிய கடிதம் என்னவென்றால். நான் தங்கள, பத்திரிகையாகிய "உடுமலை பீரங்கி" படிப்பதால் எங்களூரில் தற்சமயம் கர்ணம் வேலையிலிருக்கும் கிருஷ்ணமூர்த்திஐயர் என்பவர் நீர் டி பத்திரிகையை படித்து கொண்டு எங்கள் ஜாதியாரின் குறைகளைக் கூறிக் கொண்டிருப்பதால் உனக்கு உணவு ரேஷன் கார்டு இல்லை" என்று சொல்லி வருகிறார் (உணவுக்கு அளவரிசி சீட்டு தர மறுக்கிறார்) எனக்கு நிலம் கிடையாது. நானும் என்தாயரும் மனைவியும் மூன்று குழந்தைகளும் ஆக ஆறு பேருக்கு தினப்படி ரூ 1-4-0 வீதம் நாளொன்றுக்கு ரூ. 2-8-0 வாங்க வேண்டியிருப்பதால். என் பசிக்கொடுமையைப் போக்க, அதிகாரிகள் கவனிப்பார்களா.?

நடுப்பட்டி 20-3-49

அன்புள்ள..
லெ. தனுஷ்கோடி ரெட்டியார்

கழகத்தோற்றம்

19-3-49-ல் சத்திய விஜய நகர திராவிடர் கழகம் நிறுவப்பட்டது. தலைவர். உபதலைவர், செயலாளர். கூட்டு செயலாளர், உறுப்பினர்கள், தேர்வும் முறையே முடிந்தது. (ஒ. நி.

அம்மன் சன்னதியிலே

உடுமலை எஸ். ரஸாக்

காட்டம்பட்டி ஜமீன்தார் வையாபுரி பிள்ளை மிகுந்த சிவபக்தியுடையவர். பழமை விரும்பி அடியார்க்கு அன்னமிட்டு ஆதரிப்பவர். ஆனால் அவரது மகன் குமாரசாமியோ, தந்தையின் கொள்கைக்கு நேர்மாறானவன். சீர்திருத்த நோக்கம் படைத்தவன். விரிந்த சிந்தையினன். பரந்த நெற்றியும், பார்ப்போரை ஆகர்ஷிக்கும் அழகுத் தோற்றமும் உடையவன்.

சென்னையிலே, பி. ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அதே கல்லூரியில் இண்டர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள் கண்ணம்மா. அவள் பழங்குடியிலே பிறந்தவள். இளம் வயதிலேயே பெற்றோரை இழந்தவள். தாய்மாமனின் பராமரிப்பிலே வளர்ந்து, அரசாங்கத்தின் உபகாரச் சம்பளத்திலே கல்வி கற்று வருபவள். அவள் உயிரோவியத்தின் ஒப்பு. நாகரீகத்தின் பிரதி பிம்பம். இளமையின் இணைபிரியா வடிவம். வறுமையின் பொக்கிஷம். சாந்தமும் சஞ்சலமும் மாறிமாறிப் பிரதி பலிக்கும் சந்திர வதனம் முல்லைப் பற்கள். கரி குழல். வேல் விழி. கொவ்வைச் செவ்வாய். ரோஜா கன்னங்கள். எவரையும் எளிதிலே ஆகர்ஷிக்கும் இளமையின் மேடுகள். சுருங்கக் கூறின், குறைவில்லா அழகுப் பிம்பம் அவள்.

குமாரசாமியின்மேல் மாளாத காதல் கொண்டவள். அவனும் அவளை அன்புடன் நேசித்து வந்தான். அவர்களின் சந்திப்புக்குரிய இடம், குமாரசாமி தங்கியிருந்த அறைதான். இரவு நேரம், அவர்களின் இன்ப விளையாட்டு நேரம், இரவு அவர்கள் எதிர்கால வாழ்க்கையைக் குறித்து இன்பக் கோட்டை கட்டும் நேரம். இதையறிந்த ஏனைய மாணவர்கள் பொறாமை கொண்டனர். காதலரைப் பிரிக்கக் கனவு கண்டனர். கனவை நனவாக்க சகல ஏற்பாடுகளும் செய்தனர். குமாரசாமியின் தந்தைக்கும் முடங்கல் ஒன்று வரைந்தனர் அவனின் காதல் களியாட்டத்தைக் குறித்து.

ஜமீன்தார் கடிதத்தைப் படித்தார். கனல் கக்கினார். தன் கௌரவத்திற்கும், ஜாதிக்கும் ஆபத்து என்று அலறினார். அப்பனே, சிவனே! என்று அறைந்துக் கொண்டார் தன் கன்னத்தில். அடுத்த நிமிடமே சென்னைக்குப் பயணமானார். புகை வண்டியின் புகைச்சலைப் போல அவருள்ளமும் புகைந்துகொண்டிருந்தது.

விண்ணிலே வெண்ணிலவுதோன்றி மண்ணிலே உள்ள இருளைப்போக்கிக் கொண்டிருந்தது. இளந்தென்றலும் இலேசாக அடிவருடிக் கொண்டிருந்தது. குமாரசாமி தன் அறைக்கு அடுத்துள்ள மலர்ப் பூங்காவிலே உலவிக் கொண்டிருந்தான். பூங்காவிலே வந்து சந்திப்பதாகக் கூறிச் சென்ற பூவையைக் காணோமே என்று பெருமூச்செறிந்துக் கொண்டிருந்தான். அவனது உள்ளம் பலவாறாக எண்ணிக் கொண்டிருந்தது.

"மலர்ந்த காதற்பூ. ஆனால், அஞ்சி நுகரவேண்டியிருக்கிறது அதன் நறுமணத்தை. முள்ளிலே ரோஜா. ஆம்; சமூகமென்னும் முட்களுக்கிடையில் கண்ணம்மா என்ற ரோஜா மலர் பூத்துக் குலுங்குகிறது. அதைப் பறிக்கத் தாவுகிறது மனம். முட்கள் உறுத்துமே என்ற பயம். இந்நிலைதான் என் நிலை. அவள் வருவதாகக் கூறினாள். ஆனால், இன்னும் வந்தபாடில்லை. ஒரு சமயம் வரமாட்டாளோ? சேச்சே, அவள் அப்படிப்பட்டவளல்ல. அவசியம் வருவாள்... அதோ வந்துவிட்டாள் என்னுருயிர்க் காதலி!"

"காதல! நீண்ட நேரமாகக் காத்திருந்தீர்களா?"

"ஆம் கண்ணே! அதிக நேரமாகத்தான் காத்திருக்கிறேன் உன் வருகையைப் பார்த்து."

"காதல! தாமதத்திற்கு மன்னிக்கவும்."

"கவலை வேண்டாம் கண்ணே. காலதாமதத்திற்குக்காரணமென்ன?"

"கட்டுக்காவலைக் கடந்து வர காலதாமதமாகி விட்டது. அன்றியும் நம் சந்திப்பு பிரின்சிபாலுக்குத் தெரிந்து விட்டது. அவர், நான் உங்களைச் சந்திக்கக்கூடாது என்றும் அதை மீறி நான் உங்களைச் சந்திக்கும் விஷயம் அவர் காதிற்கு எட்டினால் நம்மிருவரையும் கல்லூரியை விட்டே நிறுத்தி விடுவேன் என்றும் பயமுறுத்துகிறார்"

"காதல் கயிற்றைக் கத்தரிக்க எண்ணுகிறார் போலும்?"

"அதிலும் உங்கள் தந்தைக்குத் தெரிந்துவிட்டால்..."

"நம் இன்ப வாழ்விற்கு இடைஞ்சல் செய்யத்தான் செய்வார்."

"இன்னலற்ற இன்ப வாழ்வு வாழ வழியில்லையா?"

"என்று இந்த சமூகம் அழிந்து நாசமாகுமோ, அன்றைக்குத் தான் நம்போன்ற இளங் காதலர்களுக்கு இன்ப வாழ்வு கிட்டும் திருநாள்."

"அதுவரையில் என்ன விபரீதம் நேருமோவென்ற பயத்தால் என் உள்ளம் நடுங்குகிறது."

"ஆம், உண்மைதான், என் தந்தை ஓர் வைதீகப் பித்து. அவர் நம்காதலை அறிந்தால் நிச்சயம் நமக்கு ஆபத்துதான்."

"ஆபத்துக்கு அஞ்சி நம் அன்புக் கயிற்றை அறுத்துக்கொள்வதா?"

"அஞ்ச வேண்டாம். அயலூருக்குச் சென்று நம் அன்பு வாழ்வை நடத்தலாம். சம்மதந்தானே?"

"கரும்புத் தின்னக் கூலி கேட்பாருண்டா? மேலும், உங்கள் மனம் வேறு, என் மனம் வேறா?"

"சரி. அப்படியானால் இன்றைக்கே நாம் வேற்றூருக்குப் பயணமாகவேண்டும்."

"சரி, அப்படியே செய்வோம்."

சமூகத்திற்கஞ்சிய அக் காதலர், வேற்றூருக்குச் சென்று தங்கள் எதிர்கால வாழ்க்கையை வளப்படுத்த நினைத்ததில் தவறொன்றுமில்லை. சென்று விட்டனர் அச் சோலையைப் பிரிந்து. தன் மடியிலே தவழ்ந்து விளையாடிய அக்காதலர் தன்னைவிட்டு பிரிந்துசெல்கின்றனர் என்ற சோகத்தின் மேலீட்டால் அச்சோலை சோர்ந்து காணப் பட்டது. வாடிய மலர்கள் பிரிவின் சகியாமையை அறிவித்தன. அவர்கள் சென்ற பின், அங்கு மரண அமைதி நிலவியிருந்தது என்றுதான் கூறவேண்டும்.

மறுநாள், குமாரசாமியும், கண்ணம்மாவும் இரவோடிரவாய் எங்கேயோ ஓடிவிட்டார்கள் என்ற செய்தி காட்டுத் தீபோல் கல்லூரி முழுவதும் பரவியது. பலர் பாவம் என்றனர். பகுத்தறிவாளர், பாழும் சமூகத்தைச் சாடினர். வைதீகர், விபசாரி என்று கண்ணம்மாளைக் கடிந்து பேசினர். பொறாமைப்பட்ட மாணவர், அக்காதலரைப் பற்றி அவதூறான கட்டுக் கதைகள் பலகட்டி, தங்கள் பொறாமைத் தீயை அணைத்துக்கொண்டனர். அங்கு வந்த ஜமீன்தார், விஷயத்தை யுணர்ந்து வந்த வழியே திரும்பிச் சென்றார்.

சென்னையை விட்டுப் புறப்பட்ட குமாரசாமியும், கண்ணம்மாவும் கோவைக்கு வந்து ஒரு மாத காலமாகியும் அவனுக்கு ஒருவேலையும் கிடைக்கவில்லை. வறுமை அவர்களை வாட்டத் தொடங்கிற்று. வறுமையைத் தாளாத கண்ணம்மா, அநுதினமும் அம்மன் கோவிலுக்குச் சென்று, தன் காதலனுக்கு ஒரு வேலை கிடைக்கும்படி அருள்புரிய வேண்டுமென்று அம்மனை வழிபட்டு வந்தாள்.

வழக்கம் போல, அன்றும் அவள் அம்மன் முன் தியானத்திலமர்ந்தாள். எவ்வளவு நேரம்வரை அவள் அப்படி உட்கார்ந்திருந்தாள் என்பது தெரியாது. தியானத்தை முடித்துக் கொண்டு அவள் கண்விழித்துப்பார்த்தாள். கோவிலில் பூசாரியைத் தவிர வேறொருவரும் காணப் படவில்லை. அப்பொழுது அவள் மனத்திலே ஏதோ ஒரு பயங்கரப்பீதி ஏற்பட்டது. பூசாரி ஒரு முறை, சுற்று முற்றும் பார்த்துவிட்டுக் கதவைத் தாழிட்டுக் கொண்டான். அவள் பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்தாள். அவன் அவளை உற்று நோக்கினான் காமாந்தகாரப் பார்வையோடு. அவளுள்ளம் திக்திக்கென்று அடித்துக் கொண்டிருந்தது. வாயை விட்டு வார்த்தைகள் வெளிவரவில்லை கூச்சல்போட. அவன் அவளை நெருங்கினான். அவள் சீறிப் பாய்ந்து அம்மன் சிலையை இறுகப் பிடித்துக்கொண்டாள். தன் கற்பை பறிக்கப் பார்க்கும் காமாந்தகாரனைத் தண்டித்துத் தன்னை இரட்சிக்கும்படி அம்மனை வேண்டினாள். சிலை வாய்த் திறக்கவில்லை. அதற்குப் பதிலாக பூசாரி ஒரு பேய்ச் சிரிப்பு சிரித்தான். அவனது இரும்புக்கரங்கள், அம்மனை தழுவி நின்ற அணங்கைப் பற்றியிழுத்து அணைத்தது. அவள் அலறினாள். அவனது பிடிப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள முயன்றாள். முடியவில்லை. முரடன் கையில் சிக்கிய முல்லை மலரின் கதியைப்போல் அவள் அவனது அணைப்பிலே துவண்டாள். அவன் தன் இச்சையைப் பூர்த்தி செய்துக்கொண்டான் அம்மன் சன்னதியிலேயே. அவளின் கற்பும்பறிபோயிற்று அதே சன்னதியிலே. அவள்தன் கற்பு பறிபோனபின் உயிரோடிருக்க விரும்பவில்லை. அம்மன் சன்னதியிலே வைக்கப்பட்டிருந்த "வேலை" எடுத்துப் பாய்ச்சினாள் பூசாரியின் மார்பிலே. ஐயோவென்றலறியபடியே கீழே சாய்ந்தான் பூசாரி. அவள் கோபம் தணியவில்லை. கனல் கக்கும் சிரிப்பொன்று சிரித்தாள். தன் கற்பு பறிபோனதைப் பார்த்தும் வாளாயிருந்த அம்மனைப் பார்த்தாள். ஆவேசத்தால் அம்மன் சிலையை அடித்து உடைத்தாள். பின்பு பூசாரியின் மார்பிலே பாய்ந்திருந்த வேலை உருவித் தன் மார்பிலே பாய்ச்சிக்கொண்டாள். உதிரம் பெருகிற்று. உயிர் உடலை விட்டுப் பிரிந்தது.

கோவிலுக்குச் சென்ற தன் காதலியைத் தேடிக்கொண்டுவந்தான் குமாரசாமி. கோவிலிலே கண்டான் காதலியைப் பிணக்கோலத்திலே. கதறினான் அவளைக் கட்டியணைத்து. கண்ணீர் வடித்தான் அவள் பிரிவைத் தாளாது. உற்று நோக்கினான் உலந்த தன் பிணத்தையும், உடைந்த சிலையையும். ஒருவாறு நடந்த விஷயத்தை யூகித்து உணர்ந்துகொண்டான். காதலியைப்பிரிந்து தனித்துவாழ அவன் மனம் ஒப்பவில்லை. சதிகாரச் சமூகத்தைச் சபித்தான். உடைந்த அம்மன் சிலையை உதைத்து மீண்டும் உடைத்தான். பிறகு; கண்ணம்மாவின் மார்பைத்துளைத்த வேலைப் பிடுங்கி தன் மார்பிலே தைத்துக் கொண்டு, அடியற்ற மரம் போல் காதலியின் சவத்தின்மேல் சாய்ந்தான். பின் மாண்டான். அன்று அம்மன் சன்னதியிலே சமூகத்தாரால் சமர்ப்பிக்கப் பட்ட காணிக்கை மூன்று பிரேதங்களும் கண்ணம்மாவினிட மிருந்து பலாத்காரத்தால் பறிக்கப்பட்ட கற்பும் உடைந்த அம்மன் சிலையுமே!

(ஸ்தாபிதம் 1931.) டேலிபோன் 2597

B. R. & SONS.

33, திருவேங்கிட முதலித் தெரு,
பெரியமேட்டு, சென்னை 3.

பெரியமேட்டு சப்-ரிஜிஸ்தராபீசுக்கு அடுத்த மேல்புறத்துச் சந்து

- எல்லாவித பத்திரங்களும் எழுதுதல்.
- தமிழிலும் இங்கிலீஷிலும் டைப் அடித்தல்.
- பத்திரங்களைப் பரிசோதித்து பாத்தியா பாத்தியங்களைத் தெரிவித்தல்
- ரிஜிஸ்தரேஷன், ஸ்டாம்பு முதலிய தகவல்களை அளித்தல்.
- சொத்துக்களின்பேரில் அடமானங்கள் ஏற்பாடு செய்தல்.
- சொத்துக்களின் பேரில் கடன்கள் பெறல்,
- கிரயங்கொள்வதற்கும், விற்பனை செய்வதற்கும்.
- ஏலம் போடுதல்

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் திறமைக்கும் உண்மைக்கும் தகுந்த இடம் இதுவே.

திரைப்பட உலகிலே
'நல்லதம்பி' 'வேலைக்காரி'

(தி. வ. அண்ணாமலை)

திரைப்பட உலகிலே அந்தகாரம் சூழ்ந்து கொண்டிருந்தது 1948-ம் ஆண்டுவரையில். பழமை படமெடுத்து ஆடியது. வைதீகம் சீறியது. வன்நெஞ்சம் நஞ்சைப் பொழிந்தது. படக்கலையிலே மாசுபடிந்திருந்தது. 47க்கு முன், 48வரையில் தோன்றிய தோற்றுவித்த படங்கள் அத்தனையும் நாட்டை நாசபுரிக்கேஇழுத்துச்சென்றன. மக்களின் மனதிலே மாயா எண்ணங்களையே எழுப்பின. மந்திரங்களால் மாங்காய் விழுவதையே போதித்தன. மூடப்பழக்கவழக்கங்களையே முளைக்கச்செய்தன. விஞ்ஞானத்தை விரட்டி அஞ்ஞானத்தை அழைத்தன. பகுத்தறிவை மறைத்து பண்டார நினைவுகளையே வெளிக்காட்டின. புது பாதைகளை அடைத்து பழமை நெறியும் பாதைகளையே சுட்டிக்காட்டின. அது மட்டுமா? காமத்தைக்கிளப்பி கருத்தை அழித்து காதகச் செயல்புரிய தூண்டுகோலாய் விளங்கின. பக்திப் பித்தினை ஊட்டி பாதகச்செயல் புரியத் தூண்டின. பரலோகத்தைநம்பி பராரியாகத் துணைபுரிந்தன. ஆண்டவனைக் காண அகோரதவம் செய்தல் வேண்டுமென படத்திலே காட்டியதன் விளைவாக பல பரிதாபக் கொலைகள்—தற்கொலைகள் நடக்க காரணமாய் திகழ்ந்தன. சுருங்கக்கூறின் நாட்டுக்கோ நாட்டுமக்களுக்கோ முள்ளின் முனையளவு பயனும் ஏற்படவில்லை படக்கலையின்மூலம். படமுதலாளிகள் பணத்தாசைகொண்டு பாதகச்செயல் பல புரிந்தனர். படக்கலையின்மூலம் நாட்டுக்கும் மக்களுக்கும். 1948 வரையில் பட உலகிலே பாம்பும், தேளும் நாட்டு மக்களிடையே நடமாடின.

ஆனால் 1949-ம் ஆண்டு அவைகளுக்கெல்லாம் சாவுமணி அடித்துவிட்டது. அறிஞர் அண்ணாவின் அரிய இரு கருத்து செறிந்த கதைகள் அவைகளுக்கு கசையடி கொடுத்த வண்ணம் இருக்கின்றன. இந்தக்கசையடிபடஉலகிலேமட்டுமல்லாமல் பாமர மக்களிடையேயும் ஒருபுரட்சியை எழிச்சியையூட்டிவிட்டன. நகையரசர் கிருஷ்ணனும் ஜூபிடரின் சொந்தக்காரரும் படஉலகில் ஓர் உன்னத நிலையை எய்திவிட்டனர். புராணீகர்களின் பயமுறுத்தலுக்கோ சனாதனிகளின் சலசலப்பிற்கோ, சுயநலப் பத்திரிகைகளுக்கோ வளைந்துகொடுக்காமல் மரணப் படுக்கையிலே புரண்டுகொண்டிருந்த படக்கலைக்கு புத்துயிர்அளித்து விட்டனர். பொதுமக்களிடையே புராணப்பித்து மறைந்துவிட்டது. பக்தி போதை தெளிந்துவிட்டது. வைதீக எண்ணம் வளைந்துவிட்டது. கலைக்கொலை காணச்சகியாத நிலை வளர்ந்துவிட்டது விழிப்புணர்ச்சி ஏற்பட்டு விட்டது என்பதை உணர்ந்துவிட்டனர் படப் பண்ணையாளருள் இருவர். நாட்டுக்கேற்ற "நல்லதம்பி"யையும் "வேலைக்காரி"யையும் போட்டியிட்டுக்கொண்டு வளர்த்ததிலிருந்தே விளங்கிவிட்டது இருவரின் மனப்போக்கும்.

மக்கள் விழிப்புணர்ச்சி பெற்றுவிட்டனர் என்பதற்குச் சான்று அவர்கள் அப்படங்களுக்கு அளித்துவரும் ஆதரவேயாகும். பட்டணவாசி முதற்கொண்டு பட்டிக்காட்டான் வரையில் "நல்லதம்பி"யையும் "வேலைக்காரி"யையும் வாயார வாழ்த்தி வரவேற்கும் காட்சியை நாம் எழுதினால் மிகைப்படுத்தி கூறுவதாக கருதிடும் கட்சிக்கண் கொண்டு நோக்குவோர் நேரில் கண்டறிய முற்படுவரேல் நம் கூற்று விளங்காதிரா.

'வேலைக்காரி' மக்களிடையே ஒரு புதிய எழுச்சியை விளைவித்துவிட்டது பக்திப் போதையையும் சாதித்திமிரையும், செல்வச்செருக்கையும் சாடுகிறார் அண்ணா. அதுமட்டுமா? பண்டார சன்னதிகளின் பகல் வேடத்தைக் கலைத்து மக்கள் மன்றத்தின் முன்னே நிறுத்தி தீர்ப்புவேண்டுகிறேன். தமிழகத்தின் தளபதி — பெர்னாட்ஷா செய்துவரும் புரட்சி பொதுமேடையிலிருந்து நாடகமேடையேறியது. நடுக்குற்றனர் நபுஞ்சகர். நாடகமேடையிலிருந்து படவுலகிலே புகுந்து புகழ் பெறுவதுகண்டு கலங்குகின்றது. கல்லினம் பூதேவர்கள் பொச்சரிப்புற்று முறையிட்டனர் போலும் நாரதரிடம் "நாஸ்திகம் பரப்பும் படம்" என்று விரைந்து விட்டான் நாரதன். நாரதன் அவன்குருட்டுக்கொள்கைப்படி கோள்மூட்டுகிறான் பொது மக்களிடத்தில். ஆனால் இது இதிகாச காலமல்லவே நாரதன் நவில்வதைக்கண்டு நஞ்சுண்டு மடிவதற்கு. அணுகுண்டு காலமாயிற்றே. மேலும் நாரதன் முப்புரி வடமணிந்தோன் என்பதையும் எல்லோருக்கும் உணர்த்திவிட்டோமே. மக்கள் உன் மண்டையிலே தடியடி நடத்துவது விளங்குகிறதே. "வேலைக்காரி"க்கு வரவேற்பு அளிப்பதிலிருந்தும் 'சக்ரதாரிக்கு'க்கு சவுக்கடி (போனியாகாதநிலை) தருவதிலிருந்தும் இன்றுமா நீ உணரவில்லை. இனி உன் பத்தாம் பசலிப்போக்கு செல்லாது. உன் முப்புரி அறுத்தெரியப்படும் காலம் நெருங்குகிறது. உணர்ந்து உன் நிலையை திருத்திக்கொள் நாரதா!

படப்பண்ணையாளர்களே எம்நகைச்சுவை மன்னரைப் பின்பற்றுங்கள். ஜூபிடரின் வழியில் செல்லுங்கள். நாட்டாரின் நல்லாசிப் பெறுங்கள். பல 'வேலைக்காரி'களையும் 'நல்லதம்பி'களையும் நாட்டுக்கு அனுப்புங்கள். நாடு நலம் பெறும். மக்களும் மாண்புறுவர். இனியும் புராணப் படங்கள் எடுத்து படவுலகினுக்கு அனுப்புவீர்களேயாகில் நிச்சயம் நீங்கள் தோல்வியே அடைவீர்கள். மக்கள் மனம் மாறிவிட்டனர். சமூகக்கருத்துக்களை பருகும் சீர்திருத்த தாகம் நிறைந்துள்ளனர். தருணம் இதுவே சமூகப்படங்களுக்கு. தவறவிடாதீர்கள். நல்ல படங்கள் திரையுலகிலே நடமாடட்டும். அதன் கருத்துக்கள் மக்களின் மனத்திரையிலே பதியட்டும்.

படப்புரட்சி வளர்க.

பிரஞ்ஞை
(CONSCIENCE)

பிரஞ்ஞை என்பது ஓர் கற்பனையாகும். அதுவும் 'கடவுள்' 'ஆன்மா' 'உயிர்' போன்ற கற்பனைச் சொல்லே. பிரஞ்ஞை ஓர் தனிப் பொருளல்ல; பிரஞ்ஞை என்பதும் நாவும், உதடும். குரலும் மற்றும் சில உறுப்புகளின் அசைவின் பயனே பிரஞ்ஞை என்று கூறப்படும். உரத்துப் பேசினால் அது தான் பேச்சு. மெதுவாக தனக்குத்தானே பேசினால் அதுதான் பிரஞ்ஞை எண்ணம் நினைவு என்று கூறவேண்டுமென்கிறான் விஞ்ஞானி. இதனையறியாது பிரஞ்ஞையை ஏதோ மறைபொருளாகுமென்று திகைப்புகொண்டிருந்தீர். உண்மையாகவே மனமென்பதும், ஆன்மாவென்பதும், பிரஞ்ஞையென்பதும் கற்பனைச் சொற்களே. உண்மையாகஉள்ளது உடல் உறுப்புக்களின் அசைவுகளே. கையின் அசைவை விளையாட்டு என்பது போலவும், காலின் அசைவை நடப்பது என்பது போலவும், தொண்டையின் அசைவை மெதுவாக பேசுவதை விஞ்ஞானமென்று மெஞ்ஞானி ஆராய்ச்சியில் நிரூபிக்க ஆரம்பித்தான்.

இவ்விதமாக மெஞ்ஞானம் ஆஸ்தீக கோட்டைகளை கைப்பற்றிக்கொண்டு வருகிறது. விஞ்ஞானம் அடைந்துவரும் ஒவ்வொரு வெற்றியும் நாஸ்தீகத்தை பலப்படுத்திக் கொண்டே வருகிறது. இந்த காட்சியை கண்டுவரும் அறிஞர்கட்கு உலகம் விரைவில் ஆஸ்தீகத்தை விட்டொழிக்கு மென்று தோன்றாமல் இராது.

சிந்தனைச் சிற்ப சிங்காரவேலர்

பெரியார் ஈ. வெ. ரா.
கோவை ஜில்லா சுற்றுப்பிரயாண விவரம்.

ஏப்ரல்	9	பவானி
	10	சத்தியமங்கலம்
	11	நாகமநாயக்கன்பட்டி
	1-	காங்கயம்
	13	தாராபுரம்
	14	கோயமுத்தூர்
	15	திருப்பூர்
	16	உடுமலைப்பேட்டை

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்
உடுமலை பீரங்கி
ஆசிரியர் உடுமலை பீ...

சந்தா விபரம்
பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்

தனிப் பிரதி	ரூ. 0-1-3
6 மாதங்களுக்கு	ரூ. 3-0-0
1 வருஷத்திற்கு	ரூ. 5-0-0

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை
விளம்பர விகிதங்களுக்கு எழுதவும்
காரியாலயம்
33, திருவெங்கிட முதலித் தெருவு,
பெரியமேட்டு, சென்னை.

✶

எல்லா ஊர்களிலும், 'ஹிக்கின் பாதம்ஸ்' ரெயில்வே புக் ஸ்டால்களிலும் கிடைக்கும்.

புரட்சிக் கவிஞரின் புதிய நூற்கள்.

காதலா கடமையா ? ...	ரூ.	1 -4-0
கடல் மேற்குமிழிகள் ...	,,	0-12-0
திருமணம் ...	,,	0-10-0
இருண்ட வீடு ...	,,	0-10-0
அகத்தியர் விட்ட புதுக் கரடி ...	,,	0- 4-0
இந்தி எதிர்ப்புப் பாட்டு...	,,	0- 4-0
திராவிடர் திருப்பாடல்...	,,	0- 4-0

கிடைக்குமிடம்
பாரதிதாசன் பதிப்பகம்
95. பெருமாள் கோயில் தெருவு
புதுச்சேரி

மறைவு

தோழர் ஜெ. இராஜரத்தினம் (பிள்ளை) அவர்கள் சென்னை பெரிய மெட்டில். காட்டூர் சடையப்ன்தெருவில் தமது இல்லத்தில் 5-4-49. செவ்வாய்கிழமை காலை சுமார் 7 மணிக்கு மாரடைப்பால் திடீரென இயற்கை எய்தின செய்தியை தெரிவித்துக் கொள்ள மிகவும் வருந்துகிறோம்

டெலிபோன் : 86729.

நியூடன் அண்டு கம்பெனி,
80, வாலாஜா ரோடு, மௌன்ட் ரோடு,
சென்னை 2.

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகலவித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும், ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.

Edited and Published by B. Rangaradhan, 33. Thiruvengada Mudali Street, Periamet, Madras. 3. Mg. Editor R. Rajagopal; Printed by Ch. Adina rayana at the Andhra Printing House,4, S ubramania Mudali Street; Purasawalkam, Madras. 7.